ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
| திகதி | 2023.03.08 |


# இலங்கையின் 75ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் முகமாக வெளியிடப்பட்ட ஞாபகார்த்த நாணயக் குற்றியின் விற்பனை

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை குறிக்கும் முகமாக வெளியிடப்பட்ட சுற்றோட்டம் செய்யப்படாத மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான ஞாபகார்த்த நாணயக் குற்றிகள், 2023.03.09ஆம் திகதி தொடக்கம் முதலில் வருவோருக்கு முதலில் வழங்குதல் அடிப்படையில் தனிப்பட்ட அடையாள விபரங்களைப் பெற்று, குற்றியொன்றுக்கு ரூ.6,000 விலையில் விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் என்பதுடன் பின்வரும் மத்திய வங்கி விற்பனை நிலையங்களில் ஆளொருவருக்கு ஒரு குற்றி வீதம் என விற்பனை மட்டுப்படுத்தப்படும்.

| விற்பனை நிலையம் | தொலைபேசி | தொலைநகல் | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| காசுக் கருமபீடம்[1] (இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 01) | +94 11 247 7371 | +94 11 247 7726 | currency@cbsl.lk |
| பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை[2] (சென்றல் பொயின்ட் கட்டடம், இல.54, செதம் வீதி, கொழும்பு 01) | +94 11 438 7405<br>+94 11 244 4503 | - | - |
| பிரதேச அலுவலகங்கள்: | | | |
| அநுராதபுரம் | +94 25 222 2024 | +94 25 222 5689 | roapura@cbsl.lk |
| மாத்தளை | +94 66 222 2167 | +94 66 222 2175 | romatale@cbsl.lk |
| மாத்தறை | +94 41 222 2269 | +94 41 222 2719 | romatara@cbsl.lk |
| திருகோணமலை | +94 26 222 6965 | +94 26 222 6967 | po-ep@cbsl.lk |
| கிளிநொச்சி | +94 21 228 5914 | +94 21 228 5911 | rokn@cbsl.lk |
| நுவரெலியா | +94 52 223 5439 | +94 52 222 4294 | rone@cbsl.lk |

*குறிப்பு: (1) இலங்கை மத்திய வங்கியின் காசுக் கருமபீடத்தில் 2023 மாச்சு 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் மாத்திரம் நாணயக் குற்றிகள் கொள்வனவுகளுக்காகக் கிடைக்கப்பெறும்.*

*(2) பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையில் 2023 மாச்சு 13 தொடக்கம் நாணயக் குற்றிகள் கொள்வனவுக்காக கிடைக்கப்பெறும்.*

இலங்கையின் சனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க மூலம் 2023.02.02 அன்று கண்டியில் அமைந்துள்ள சனாதிபதி மாளிகையில் வைத்து ஞாபகார்த்த நாணயக் குற்றி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. நாணயக் குற்றி பற்றிய விரிவான விபரணமும் விபரக்குறிப்புகளும் முன்னர் வெளியிடப்பட்ட எமது ஊடக அறிக்கை மூலம் தொடர்பூட்டப்பட்டுள்ளதுடன் பின்வரும் இணைப்பினூடாக இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/P.R_20230202_the_cbsl_issues_a_coin_to_mark_the_75th_independence_celebration_of_sri_lanka_t.pdf).